ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி இணைந்து நடத்தும் சென்னை பள்ளி மாணவர்களுக்கான இணைய பாதுகாப்பு விழிப்புணர்வுப் பயிற்சியினை மேயர் ஆர். பிரியா தொடங்கி வைத்து சின்னத்தை வெளியிட்டார். இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், நிலைக் குழுத் தலைவர் கல்வி பாலவாக்கம் த. விஸ்வநாதன், ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி முதல்வர் ஸ்டெல்லா மேரி, துணை முதல்வர் ஜெயப்பிரியா மற்றும் கல்வி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை பள்ளி மாணவர்களுக்கான

இணைய பாதுகாப்பு விழிப்புணர்வுப் பயிற்சி!

மேயர் திருமதி ஆர். பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.3- பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி இணைந்து நடத்தும் சென்னை பள்ளி மாணவர்களுக்கான இணைய பாதுகாப்பு விழிப்புணர்வுப் பயிற்சியினை மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் நேற்று (02.09.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கி வைத்து, இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கான சின்னம் மற்றும் கையேட்டினை வெளியிட்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி இணைந்து, "இணைய பாதுகாப்பு நமது பொறுப்பு" ("Building a Cyber-Aware Society Together") என்ற தலைப்பில் கோயம்பேடு, விருகம்பாக்கம், புலியூர், நெசப்பாக்கம், கே.கே.நகர், மேற்கு மாம்பலம், சி.ஐ.டி. நகர் சென்னை மேல்நிலைப் பள்ளிகள், சைதாப்பேட்டை சென்னை ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகள், ரங்கராஜபுரம், கன்னியப்பாநகர், ஜாபர்கான்பேட்டை மற்றும் கண்ணம்மாபேட்டை சென்னை உயர் நிலைப்பள்ளிகள் என 13 சென்னை பள்ளிகளில் 8, 9 மற்றும் 10ஆம் வகுப்பி பயிலும் மாணவர்களுக்கு முதற்கட்டமாக இணைய பாதுகாப்பு விழிப்புணர்வுப் பயிற்சி வழங்கப்பட்டது.

இந்த விழிப்புணர்வு பயிற்சியில் மேயர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வியும், சுகாதாரமும் தன்னுடைய இரு கண்கள் என்று கூறியுள்ளார். அதனடிப்படையில் தமிழ்நாட்டில் கல்விக்காக பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். பள்ளி மாணவர்களுக்கு பாலின நிகர் மேம்பாடு மற்றும் கொள்கை ஆய்வகம் (Gender and Policy Lab) மூலமாக பாலினச் சமத்துவம் குறித்த விழிப்புணர்வும், பள்ளி மாணவர்கள் அவர்களின் குறிக்கோளை அடைவதற்கு தேவையான மேற்படிப்பு பயில்வதற்கு ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. மேலும், மாணவர்களுக்கு பள்ளி படிப்பு மட்டுமில்லாமல் பொது அறிவையும் வளர்த்துக் கொள்ளும் வகையில் கல்விச் சுற்றுலாவும் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இன்றைய காலக்கட்டத்தில் Cyber-Aware Society Together என்ற தலைப்பில் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியுடன் இணைந்து சென்னை பள்ளி மாணவர்களுக்கு இணைய பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. மொபைல், டெக்னாலஜி, டிஜிட்டல் சேவை ஆகியவை அதிகமாக இன்றைய காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதாவது, டேட்டாஸ், நோட்ஸ் எடுப்பதற்கும் இப்போது பேப்பர் பயன்படுத்துவது இல்லை. மொபைல் போனில் தான் குறிப்பு எடுத்துக் கொள்கிறார்கள். அவ்வாறு டெக்னாலஜி அதிகமாக வளர்ந்துள்ளது. டெக்னாலஜி வளர்வது என்பது நம்முடைய பாசிட்டிவ் வளர்ச்சிக்காக மட்டும்தான். அதிக நேரம் ஒரு வேலையில் ஈடுபடுவதை டெக்னாலஜி மூலமாக விரைவில் முடித்திட டெக்னாலஜி பயன்படுத்தப்படுகிறது.

ஆனால், இப்போது இந்த டெக்னாலஜியை எந்தளவிற்கு தவறான முறையில் கொண்டு செல்ல முடியுமோ, அதற்கென்று ஒரு குழுவே செயல்படுகிறது. அவர்கள் இதனை தவறான முறையில் செயல்படுத்துகிறார்கள். இதுபோன்ற தவறான டெக்னாலஜி முறைகளில் பள்ளி மாணவர்கள் செல்லக் கூடாது என்பதற்காக இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இதற்காக விழிப்புணர்வு கையேடும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கையேட்டில் நிறைய தலைப்புகளில் மாணவர்களுக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. இதில் முக்கியமாக, ஏஐ டெக்னாலஜி குறித்தும், சிப்லி போட்டோ எடிட்டிங் ஆப் மூலமாக புகைப்படம் பதிவிடும்போது, வாட்ஸ்ஆப் மூலமாக புகைப்படங்கள் அனுப்பும் போதும், பாஸ்வேர்ட்ஸ் பகிரும் போது, நண்பர்களுடன் இருக்கும் வீடியோக்களை பகிரும் போது, எந்தளவிற்கு பாதுகாப்பனதாக இருக்கிறது. எந்தளவிற்கு பாதுகாப்பனதாக இல்லை என்பதை மாணவர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

சென்னையில் ஒரு செய்தி பகிர்ந்தால், உடனடியாக உலகளவில் சென்று சேரும் வகையில் இன்றைய தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. 20 முதல் 30 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் இங்கிருந்து பக்கத்து ஊருக்கு ஒரு கடிதம் அனுப்பினால், அது சென்று சேர சில நாட்கள் ஆகும். அப்படியிருந்த காலகட்டம் மாறி தற்போது அனைத்து செய்திகளும் உடனடியாக சென்று சேருகிறது.

இவ்வாறான டிஜிட்டல் தொழில்நுட்ப காலத்தில் எவ்வாறு நாம் அதை கடைப்பிடிக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமானது. அதே போல் Youtube பார்க்கும் போது தேவையில்லாத ஒரு லிங்க்ஸ் வரும். உங்களுக்கே தெரியாமல் அந்த லிங்கை கிளிக் செய்து விடுவீர்கள். இந்த லிங்கானது தேவையில்லாத இணைப்புகளுக்குள் செல்லும். இவ்வாறான நேரங்களில் எவ்வாறு வெளியில் வர வேண்டும் என்பது குறித்தும், இதிலிருந்து உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள், தொழில் முறை தகவல்கள் இவற்றை எவ்வாறு பாதுகாப்பாக பயன்படுத்த வேண்டும் என்பது குறித்தும் இந்தப் பயிற்சி வகுப்பில் சொல்லித் தரப்படும்.

தற்போது எல்லாமே டிஜிட்டல் மயமாக மாறிவிட்டது. பள்ளிகளில் ஸ்மார்ட் போர்டுகள், ஸ்மார்ட் டெக்னாலஜி ஆகியவை கொண்டு வரப்பட்டுள்ளது. இவை அனைத்தும் பாசிட்டிவ் வழியில் எடுத்துச் செல்ல பயன்படுகிறது. இணைய செயல்பாடுகளில் நெகட்டிவிட்டிகளையும் தெரிந்து கொண்டால் தான் இதுகுறித்த விழிப்புணர்வு ஏற்படும்.

சென்னை பள்ளி மாணவர்கள் இந்த விழிப்புணர்வு பயிற்சியினை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் மட்டுமில்லாமல் உங்கள் குடும்பங்களில் உள்ள அனைவருக்கும் டிஜிட்டல் முறையினை எந்தளவிற்கு பாதுகாப்பான முறையில் பயன்படுத்த வேண்டும் என்பது குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் த. விஸ்வநாதன், ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி முதல்வர் சகோதரி ஸ்டெல்லா மேரி, துணை முதல்வர் ஜெயப்பிரியா மற்றும் கல்வி அலுவலர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

சென்னை தலைமைச் செயலகத்தில், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அரசு அறிவித்துள்ள, மாநிலத்தின் மூன்றாவது உயிரியல் பாரம்பரிய தளமாக ஈரோடு மாவட்டத்தில் உள்ள எலத்தூர் ஏரி பற்றிய குறும்படத்தை வெளியிட்டார். இந்நிகழ்வில் சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, தமிழ்நாடு உயிர்ப் பல்வகைமை வாரிய உறுப்பினர் செயலர் செல்வி. மித்தா பானர்ஜி, சத்தியமங்கலம் மாவட்ட வன அலுவலர் யோகேஷ் குலால், சூழல் அறிவோம் அமைப்பின் உறுப்பினர் தீபக் மற்றும் உயிர்ப் பல்வகைமை மேலாண்மை குழு எலத்தூர் பேரூராட்சி தலைவர் நாகராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில்

திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

சென்னை, செப். 3 - எழும்பூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6க்குட்பட்ட வார்டு எண்.77 மற்றும் 78இல் நடைபெற்று வரும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமையில் நடைபெற்றது.

எழும்பூர் தொகுதி, சென்னை மாநகராட்சி, மண்டலம் 6க்குட்பட்ட வார்டு எண். 77 மற்றும் 78 இல் சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியம் ஆகிய துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் பணிகள்; இவ்விரு வார்டுகளிலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் நடைபெற்று வரும் பணிகள்; இவ்விரு வார்டுகளைச் சேர்ந்த பொதுமக்கள் அளித்துள்ள கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் எதிர்வரும் பருவமழைக் காலத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமையில், சென்னை மாநகராட்சி மத்திய மண்டலத் துணை ஆணையர் எச்.ஆர். கௌஷிக், ஐ.ஏ.எஸ். முன்னிலையில் ஷெனாய் நகரிலுள்ள மாநகராட்சி மத்திய மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது. இவ்விரு வார்டுகளில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடிக்குமாறு இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி 6ஆவது மண்டல அலுவலர் மற்றும் 77, 78 வார்டுகளைச் சேர்ந்த மாநகராட்சி, சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரியத்தின் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தலைமை நே. சிற்றரசு! நா. இராமலிங்கம் – ச.பரமசிவம் முன்னிலை! சென்னை மேற்கு மாவட்ட

பொறியாளர் அணி அமைப்பாளர் ச. அசோக்குமார் இல்ல மணவிழா வரவேற்பு!

அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி – தயாநிதி மாறன் எம்.பி. – எம்.கே.மோகன் – கலாநிதி வீராசாமி எம்.பி. – மேயர் பிரியா வாழ்த்து!

சென்னை, செப்.3 சென்னை மேற்கு மாவட்ட பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ச. அசோக்குமார் இல்ல திருமண வரவேற்பு (03.09.2025 புதன்கிழமை) இன்று மாலை 6.30 க்கு மற்றும் திருமணம் (நாளை 04.09.2025) வியாழக்கிழமை காலை 7.30 மணிக்குமேல் S.S.E.திருமண மஹால், ரசாக்கார்டன் மெயின் ரோடு, அரும்பாக்கம் - 600 106.ல் மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு தலைமையில் நடைபெறுகிறது.

பகுதி செயலாளர்கள் நா. இராமலிங்கம் எம்.சி., ச. பரமசிவம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். ந.அதியமான், இரா.பொண்ணுரங்கம், கருணாநிதி வி.எம்.சிவா ப.மகேஷ் ராஜா இரா.ரவீந்திரகுமார், வழக்கறிஞர் மா.இளைய ராஜா ஆகியோர் வரவேற்பு அளிக்கின்றனர்.

மணமக்கள் அண்ணாநகர் தெற்குப் பகுதி பொறியாளர் அணி பகுதி அமைப்பாளர் ஆர்.பிரவீன்குமார் - ஏ.நந்தினி ஆகியோரை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தயாநிதி மாறன் எம்.பி., எம்.கே. மோகன் எம்.எல்.ஏ., கலாநிதி வீராசாமி எம்.பி., மேயர் பிரியா ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

விழாவில் கே.கருணாநிதி, கார்த்திக் மோகன், இரா.நரேந்திரன், ஏ.ஆர். பி.எம்.காமராஜ் எம்.சி., மதன்மோகன் எம்.சி., மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ். கலைச் செல்வன், ஆ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, ஐ.கென்னடி உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகளும் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

விழாக்கு வருகை தரும் அனைவரையும் இளையா பிரதர்ஸ் வரவேற்கின்றனர்.

இறுதியில் ச. உதயகுமார் நன்றி கூறுகிறார்.

மயிலை 125-வது வட்டத்தில்

'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

வட்டச் செயலாளர் அ.தவநேசன் அறிக்கை

சென்னை, செப். 3 - மயிலை கிழக்குப் பகுதி 125-வது வட்டச் செயலாளர் அ.தவநேசன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம் - மயிலை கிழக்குப் பகுதி 125 -வது வார்டில் இன்று (3.9.2025) காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை சாந்தோம் மேல்நிலைப் பள்ளி அரங்கத்தில் பொதுமக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் நடைபெறுகிறது.

இதில் அனைத்துத் துறை அதிகாரிகளும் பங்கேற்று பொதுமக்களின் வழங்கும் மனுக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கின்றனர்.

எனவே வட்டத்திற்குட்பட்ட அந்தப் பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள் தங்கள் பகுதி வாழ் மக்களை அழைத்து வந்து அவர்களது பிரச்சினைகளைகளுக்கு மனு அளித்து, பொதுமக்களை பயன் அடையச் செய்யம்படி வட்டச் செயலாளர் அ.தவநேசன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

"ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர்கள் சேர்க்கை பணியில் ஈடுபட்ட அம்பத்தூர் வடக்கு பகுதி, 80 வது வட்ட பாகநிலை முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் ஆகியோரை சிறப்பிக்கும் வகையில் அம்பத்தூர் 7 வது மண்டலக் குழுத் தலைவரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான வழக்கறிஞர் பி.கே.மூர்த்தி சிறப்பு செய்து கௌரவித்தார். கூட்டத்தில் கழகத்தின் அடுத்த கட்ட வளர்ச்சி குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. உடன் வட்டக் கழகச் செயலாளர் வெ. இராதாகிருஷ்ணன், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் திருப்பூர் வடக்கு மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

திருப்பூர் வடக்கு மாவட்டம்

தலைவர் - ர. சாந்தி 5/30ஏ, பி.எஸ். சுந்தரம் தெரு, அவிநாசி, திருப்பூர் - 641654.

துணைத் தலைவர் - எஸ். சகிலா பேகம் 2/3, ஓலப்பாளையம் மாரியம்மன் கோவில் முதல் வீதி, திருப்பூர் - 641602.

அமைப்பாளர் - செ. ராணி செந்தில் 1/75, தெலுங்கு பாளையம், பிள்ளையப்பன் பாளையம் அஞ்சல், அன்னூர் - 641653, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். வித்யானந்தி 1/427, கருப்பராயன் கோவில் வீதி, குன்னத்தூர், சாசா குளம், கோவை - 641107. 2) கே. சித்ரா தேவி 8/2896, குடோன் 4வது வீதி, பாண்டியன் நகர், பூலுவபட்டி அஞ்சல், திருப்பூர் - 641602. 3) த. பப்பிதா 3/172, நல்லி செட்டிபாளையம் அஞ்சல், அன்னூர் வழி, அன்னூர் தாலுக்கா, அன்னூர் - 641653, திருப்பூர் மாவட்டம். 4) எஸ். அமுதா 2/385/1, கௌஸ் நகர், முறியாண்டம்பாளையம் அஞ்சல், அவிநாசி தாலுக்கா, திருப்பூர் - 641655. 5) பொ. சத்தியாதேவி 55ஏ, ராஜீவ் காந்தி இல்லம், துரைசாமி நகர், திருமுருகன்பூண்டி, திருப்பூர் - 641652. 6) மு. நிலாவர்நிஷா எஸ்.வி. காலனி, நாவலர் நகர் 2வது வீதி, திருப்பூர் - 641602. 7) ம. கோமதி 3/35சி, நல்லிசெம்பியம்பாளையம், அன்னூர், திருப்பூர் மாவட்டம்.

திருப்பூர் வடக்கு மாநகரம்

தலைவர் - கா. வேலம்மாள் 5/1089, கங்கா நகர், பி.என். ரோடு, திருப்பூர் - 641603.

துணைத் தலைவர் - எம். லதா 15/6, செல்வராஜ் 2வது வீதி, கொங்கு மெயின் ரோடு, திருப்பூர் - 641607. அமைப்பாளர் - ப. காளீஸ்வரி 1/1807ஏ, லட்சுமி நகர், தோட்டத்துப்பாளையம், கருப்பராயன் கோவில் (பின்புறம்) நெருபெரிச்சல், பூலுவப்பட்டி, திருப்பூர் - 641602.

துணை அமைப்பாளர்கள் - 1) என். தங்கமணி 57, மருதாசலபுரம் மெயின் வீதி, குமாரனந்தபுரம், திருப்பூர் - 641602. 2) சத்யா தேவி 54/1, திலகர் நகர் மெயின் ரோடு, அனுப்பர்பாளையம், திருப்பூர் - 641652. 3) டி. தேவகி 35/36, ஆசர் மில் லேபர் குடியிருப்பு, ஓலப்பாளையம், திருப்பூர் - 641603. 4) சி. மெர்சி 1/1125, ஆர்.சி. புதூர், நெருப்பெரிச்சல், திருப்பூர் - 641602. 5) நா. அமீர்பீபீ 76, இந்திரா காந்தி காம்பவுண்ட், திலகர் நகர் முதல் வீதி, அனுப்பர்பாளையம், திருப்பூர் - 641652.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02-09-2025.

நாமக்கல் ப.இராணி
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

எழும்பூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6க்குட்பட்ட வார்டு எண்.77 மற்றும் 78இல் நடைபெற்று வரும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமையில் நடைபெற்றது. இவ்வாய்வுக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி 6ஆவது மண்டல அலுவலர் மற்றும் 77, 78 வார்டுகளைச் சேர்ந்த மாநகராட்சி, சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரியத்தின் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் ஒன்றிய உட்பட்ட காட்டூரில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்துகொண்டு பொதுமக்களின் குறைகளை கேட்டு அறிந்து சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தெரிவித்து நடவடிக்கைகள் மேற்கொண்ட பயனாளிகளுக்கு பல்வேறு சான்றிதழ்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கினார் உடன் கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வெ.அன்புவனணன், பொதுக்குழு உறுப்பின பா.செ.குணசேகரன், ஒன்றிய செயலாளர் ஆ.ராஜா, ஸ்டாலின், பா.து.தமிழரசன், செல்வராமன், சண்முகம், டிவி. கிருஷ்ணன், செல்வம், கவிதா மனோகரன், ராஜேஷ் முத்து, உட்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.